**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்**

# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் II பரீட்சை - 2024 யூலை

## (204) வணிக முகாமைத்துவம்

இந்த வினா 15 உப பிரிவுகளைக் கொண்டுள்ளது. வினா இல. 01 இற்கான மொத்தப் புள்ளிகள் 25 ஆகும். இவ்வினாத்தாள் 07 கட்டாய வினாக்களைக் கொண்ட **A, B, C** என்ற மூன்று பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

## பகுதி A

### வினா இல. 01

வினா இல. 1 ஆனது பதினைந்து (15) OTQs ஐக் கொண்டிருந்தது. வினா இலக்கம் ஒன்றிற்கான மொத்தப் புள்ளிகள் 25 ஆகும். வினாக்கள் வணிக முகாமைத்துவப் பாடத்தின் சகல பகுதிகளையும் உள்ளடக்கியவாறு முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தது.

உப வினாக்கள் இல. **1.1** தொடக்கம் **1.5** வரையானவற்றைப் பொறுத்த வரையில், மிகப் பொருத்தமான விடை தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதுடன் அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட விடையின் இலக்கம் விடைப்புத்தகத்தில் எழுதப்பட வேண்டும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியான விடைகளைத் தெரிவு செய்திருந்தனர். பாடம் தொடர்பில் குறைந்த அறிவைக் கொண்டிருந்த சில பரீட்சார்த்திகள் சரியான விடையைத் தெரிவு செய்யத் தவறியிருந்ததால் அவர்கள் குறைவான புள்ளிகளையே பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் சரியான விடையின் இலக்கத்திற்குப் பதிலாக விடையை முழுமையாக எழுதியிருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

வினா இலக்கங்கள் **1.6** தொடக்கம் **1.10** வரையானவற்றைப் பொறுத்தவரை, பரீட்சார்த்திகள் அடைப்புக்குறிக்குள் தரப்பட்ட இரண்டு விடைகளிலிருந்து சரியான விடையைத் தெரிவு செய்ய வேண்டும் என்பதுடன் அவ்விடையை வினா இலக்கத்துடன் விடைப் புத்தகத்தில் எழுதுதல் வேண்டும். பெரும்பாலான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கும் சரியான விடைகளை அளித்திருந்தனர். சிறிய எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் தரப்பட்ட அறிவுறுத்தல்களில் கவனம் செலுத்தாது சரியான விடைக்குப் பதிலாக 1 அல்லது 2 என எழுதியிருந்தனர்.

உப வினாக்கள் **1.11** தொடக்கம் **1.15** வரையானவற்றிற்கு வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு, குறுகிய விடைகளை எழுதுமாறு கேட்கப்பட்டது.

**1.11** இங்கு, சமகால வணிகச் சூழலில் முகாமையாளர்கள் சந்திக்கின்ற இரண்டு பிரதான சவால்களைக் குறிப்பிடுமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்பட்டனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்திருந்த போதிலும், சிலர் சரியான விடைகளைக் குறிப்பிடத் தவறியிருந்தனர்.

**1.12** உற்பத்தித்திறனின் கருத்தை விபரிக்கும்போது, பலர் திருப்திகரமான விடையை அளிக்கத் தவறியிருந்ததை அவதானிக்க முடிந்தது.

**1.13** இங்கு அடிப்படை சந்தைக் கலவையை இனங்காணுமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் 4Ps இனைக் குறிப்பிட்டு புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**1.14** பரீட்சார்த்திகள் மாற்ற முகாமைத்துவம் என்றால் என்ன என்பது பற்றி விபரிக்குமாறு கேட்கப்பட்டனர். குறிப்பிடத்தக்க அளவான பரீட்சார்த்திகள் அதனைச் செய்யத் தவறியிருந்தனர்.

**1.15** இங்கு ஊழியர்கள் மாற்றத்தினை எதிர்ப்பதற்கான இரண்டு காரணங்களைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் நிச்சயமற்றதன்மை, கட்டுப்பாட்டு இழப்பு, நம்பிக்கையின்மை, வேலைப்பளு அதிகரித்தல் போன்ற சரியான விடைகளை எழுதியிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் இருந்தது.**

## பகுதி B

இப்பகுதி ஒவ்வொன்றும் 10 புள்ளிகளைக் கொண்ட மொத்தம் 50 புள்ளிகளுக்காக 05 கட்டாய வினாக்களைக் கொண்டிருந்தது. இந்த 05 வினாக்களுக்குமான பெரும்பாலான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை மட்டம் திருப்திகரமாக இருந்தது. சில பரீட்சார்த்திகள் சில வினாக்களுக்கு விடையளிப்பதைத் தவிர்த்திருந்ததையும் வேறு சில பரீட்சார்த்திகள் சில வினாக்களுக்கு திருப்தியற்ற விடைகளை வழங்கியிருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

### வினா இல. 02

இவ்வினா **(a), (b), (c)** என்ற மூன்று பகுதிகளை உள்ளடக்கியிருந்தது.

**(a)** இங்கு திட்டமிடலின் கருத்தைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் நன்றாக விடையளித்திருந்ததுடன் முழுமையான புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**(b)** தீர்மானமெடுத்தலில் தகவல்கள் ஏன் முக்கியமானவை என்பதற்கான மூன்று (03) காரணங்களை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. பரீட்சார்த்திகள் வினாவுடன் தொடர்பற்ற பல்வேறு விடைகளை அளித்திருந்ததை அவதானிக்க முடிந்தது. மேலும், சில பரீட்சார்த்திகள் இவ்வினாவைப் பிழையாக விளங்கிக் கொண்டிருந்ததால் குறைந்தளவு புள்ளிகளையே பெற்றிருந்தனர்.

**(c)** பிரிவுக் கட்டமைப்பின் இரண்டு (02) அனுகூலங்களைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலானவர்கள் துல்லியமான விடைகளை வழங்கி இப்பகுதிக்காக ஒதுக்கப்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மோசமான மட்டத்தில் இருந்தது.**

### வினா இல. 03

இவ்வினா **(a), (b), (c)** என்ற மூன்று (03) பகுதிகளை உள்ளடக்கியிருந்தது.

**(a)** அதிகாரத்திற்கும் வலுவிற்கும் இடையிலான வேறுபாட்டை விபரிக்குமாறு கேட்கப்பட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் வெற்றிகரமான விடைகளை அளித்திருந்தனர். மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான பரீட்சார்த்திகள் இதற்காக ஒதுக்கப்பட்டிருந்த நான்கு புள்ளிகளையும் பெறத் தவறியிருந்தனர்.

**(b)** இங்கு புதிய தொழினுட்பங்களுடன் நிதி முகாமையாளர் ஒருவருக்குத் தேவையான இரண்டு (02) ஆற்றல்களை இனங்காணுமாறு கேட்கப்பட்டது. வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் மாத்திரமே இவ்வினாவுக்கு விடையளித்து ஒதுக்கப்பட்ட இரண்டு

புள்ளிகளையும் பெற்றிருந்தனர். குறிப்பிட்ட சில பரீட்சார்த்திகள் புதிய தொழினுட்பம் பற்றி விளங்கிக் கொள்ளாது விடையளித்திருந்தனர்.

**(c)** இங்கு அதிநவீன நிதிசார் தொழினுட்ப முறைமையை நடைமுறைப்படுத்துவதில் பயனுறுதிமிக்க தொடர்பாடல் செயன்முறையொன்று கொண்டிருக்கும் இரண்டு (02) முக்கியத்துவங்களை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. சம்பந்தப்பட்ட விடயங்களைக் குறிப்பிட்டிருந்த பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக உயர்ந்தபட்சப் புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

## வினா இல. 04

இது தொழிற்பாட்டு முகாமைத்துவம் மற்றும் வழங்கல் சங்கிலி முகாமைத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட வினாவாகும். இவ்வினா **(a), (b), (c)** ஆகிய பகுதிகளைக் கொண்டிருந்தது.

**(a)** இவ்வினா வழங்கல் சங்கிலி முகாமைத்துவம் தவிர்ந்த தொழிற்பாட்டு முகாமைத்துவத்தின் இரண்டு (02) தொழிற்பாடுகளை விபரிக்குமாறு கேட்டிருந்தது. இங்கு மிக இலகுவாக புள்ளிகளைப் பெறக்கூடிய சாத்தியம் காணப்பட்ட போதிலும், மிகச் சில பரீட்சார்த்திகளே வெற்றிகரமாக விடையளித்து புள்ளிகளைப் பெற்றிருந்தனர். வினாவைச் சரியாக வாசிக்காது வழங்கல் சங்கிலி முகாமைத்துவத்தை விபரித்திருந்த பல பரீட்சார்த்திகள் காணப்பட்டனர்.

**(b)** இவ்வினா பயனுறுதிமிக்க வழங்கல் சங்கிலி முகாமைத்துவத்தின் இரண்டு (02) முக்கியத்துவங்களை விபரிக்குமாறு கேட்டிருந்தது. பல பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு விடையாக வினாவிலுள்ள பந்தியையே எழுதியிருந்ததை அவதானிக்க முடிந்தது. இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.

**(c)** இங்கு பொருள்கள் மற்றும் சேவைகளுக்கிடையிலான இரண்டு (02) வேறுபாடுகளைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு சரியாக விடை அளித்திருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

## வினா இல. 05

இங்கு மனித வள முகாமைத்துவம் மற்றும் நிறுவன நடத்தை பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சிக்க எதிர்பார்க்கப்பட்டது.

**(a)** இவ்வினா நிறுவனம் ஒன்றிற்கு HRM ஏன் முக்கியமானது என்பதற்கான மூன்று (03) காரணங்களை விபரிக்குமாறு கேட்டிருந்தது. இது கோட்பாடு மற்றும் நடைமுறை அறிவுகளைப் பயன்படுத்தி விடையளிக்கப்படக்கூடிய ஒரு வினாவாக இருந்தது. பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு வெற்றிகரமாக விடையளித்திருந்தனர். பெரும்பாலானவர்கள் மனித வள முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தை விளக்கி முழுமையான புள்ளிகளைப் பெற்றிருந்தனர். குறித்த சில பரீட்சார்த்திகள் அவர்களது நடைமுறை அறிவைப் பயன்படுத்தி சிறப்பான விடைகளை எழுதியிருந்தனர்.

**(b)** ஒரு நிறுவனத்திற்கான நிறுவன நடத்தையின் நான்கு (04) நன்மைகளைக் குறிப்பிடுமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்பட்டனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

**வினா இல. 06**

இவ்வினா ''துண்டப்படுத்தல் மற்றும் நிலைப்படுத்தல்'', ''டிஜிடல் சந்தைப்படுத்தல்'', ''வேறுபடுத்தல் தந்திரோபாயம்'' என்பவை பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சிப்பதற்காக அமைக்கப் பட்டிருந்தது.

**(a)** இங்கு, துண்டப்படுத்தல் மற்றும் நிலைப்படுத்தல் ஆகியவற்றிற்கிடையிலான வேறுபாட்டை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. இங்கு அனைத்து மூன்று புள்ளிகளையும் பெற்றுக்கொண்டது மிகவும் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டதுடன் பெரும்பாலான பரீட்சார்த்திகள் திருப்திகரமாக விடையளிக்கவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. மிகச் சில பரீட்சார்த்திகள் மாத்திரமே ஒதுக்கப்பட்டிருந்த புள்ளிகளைப் பெற்றிருந்தனர். வரைவிலக்கணங்களை வழங்கும்போது போதிய அறிவோ, தெளிவோ காணப்படாமை அவதானிக்கப்பட்டது.

**(b)** வணிகத்திற்கான டிஜிடல் சந்தைப்படுத்தலின் 02 அனுகூலங்களை விபரிக்குமாறு பரீட்சார்த்திகளிடம் கேட்கப்பட்டது. மிகவும் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் மாத்திரமே திருப்திகரமாக விடையளித்து, புள்ளிக்ளைப் பெற்றிருந்தனர். இது புரிந்துகொள்ளும் திறன் போதியதாக இல்லை என்பதைக் காட்டுகிறது.

**(c)** இங்கு, வேறுபடுத்தல் தந்திரோபாயம் என்பதால் யாது கருதப்படுகிறது என்பதை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் மோசமான விடைகளையே அளித்திருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மோசமான மட்டத்தில் இருந்தது.**

## <u>பகுதி C</u>

**வினா இல. 07**

இவ்வினா விடய ஆய்வை அடிப்படையாகக் கொண்ட வினாவாகும். கோட்பாட்டு ரீதியான விடயங்கள் பரீட்சார்த்திகளால் எவ்வாறு பகுப்பாய்வு செய்யப்படுகிறது என்பதைப் பரீட்சிப்பதற்காக இவ்வினா அமைக்கப்பட்டிருந்தது. இவ்வினா **(a), (b), (c), (d), (e)** ஆகிய ஐந்து பகுதிகளைக் கொண்டுள்ளது.

**(a)** இவ்வினா பயனுறுதிமிக்க தலைமைத்துவம் ஏன் முக்கியமானது என்பதற்கான மூன்று (03) காரணங்களை விபரிக்குமாறு கேட்டிருந்தது. இங்கு காரணங்களைக் குறிப்பிடுவதற்கு 03 புள்ளிகளையும் அவற்றை விபரிப்பதற்கு 03 புள்ளிகளையும் வழங்க புள்ளியிடும் குழு தீர்மானித்திருந்தது. பல பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு துல்லியமான விடையை எழுதியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் வினாவைச் சரியாக விளங்கிக் கொள்ளாது தலைவர் ஒருவரின் பண்புகளை வலியுறுத்தியிருந்தனர்.

**(b)** புதுப்பிக்கப்பட்ட பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள், ஊழியர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கும் புத்தாக்கங்களை வளர்ப்பதற்கும் எவ்வாறு பங்களிப்புச் செய்கின்றன என்பதற்கான மூன்று (03) வழிகளை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. இங்கு, பல பரீட்சார்த்திகள் பயிற்சி மற்றும் அபிவிருத்தி பற்றி வலியுறுத்தியிருந்தனர். விடைகள் மிகவும் மோசமாக அமைந்திருந்தன.

**(c)** பல்வேறு வாடிக்கையாளர் தளங்களையும் ஈர்ப்பதற்கு அதன் வர்த்தக் குறியீட்டின் மீள்நிலைப்படுத்தலைப் பயன்படுத்துவதால் எயார்லைன்ஸ் இற்குக் கிடைக்கும் மூன்று (03) நன்மைகளை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. இவ்வினாவுக்கு திருப்திகரமாக விடை அளிக்கப்பட்டதை அவதானிக்க முடிந்தது. கணிசமானளவு பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தனர். வர்த்தகக் குறியீடு பற்றிய பொது அறிவை பல பரீட்சார்த்திகளும் பிரயோகித்திருந்தனர்.

**(d)** இங்கு, எயார்லைனின் தந்திரோபாய திட்டமிடல் செயன்முறைக்கான சூழல் பகுப்பாய்வு ஏன் முக்கியமானது என்பதை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. விபரிக்கும்போது, பல சம்பந்தமற்ற விடயங்கள் எழுதப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. SWOT, PEST, PESTEL போன்றவற்றுடன் தொடர்பற்ற விதத்தில், வினாவுடன் தொடர்புடைய விடயங்களை எழுதுவது முக்கியமான தாகும். வெறுமனே விபரமான விடைகளை எழுதுவது புள்ளிகளைப் பெற உதவி செய்யாது. மிகச் சில பரீட்சார்த்திகள் மாத்திரமே அதனைத் துல்லியமாக விபரித்ததன் மூலம் ஒதுக்கப்பட்ட முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**(e)** பீக்கொக் எயார்லைன்ஸ் இன் பல்வேறு முகாமைத்துவ மட்டங்களிலும் விருத்தி செய்யப்பட்டுள்ள மூன்று (03) பிரதான தந்திரோபாயங்களை அடையாளங் காணுமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்பட்டனர். தந்திரோபாயங்களின் வகைகள் பற்றிய புரிந்துணர்வு மிகவும் குறைவாகவே காணப்பட்டது. இதனால், இப்பகுதிக்கு திருப்தியற்ற செயலாற்றுகை மட்டம் அவதானிக்கப்பட்டது. பல பரீட்சார்த்திகள் முகாமைத்துவ மட்டங்கள் மற்றும் தந்திரோபாயங்கள் பற்றி சரியான விளக்கத்தைக் கொண்டிருக்கவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சாதாரண மட்டத்திலேயே காணப்பட்டது.**

------

**<u>பரீட்சார்த்திகளின் விளங்கிக்கொள்ளும் மட்டத்தையும் ஆற்றல் மட்டத்தையும் மேம்படுத்தும் பொருட்டு கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய பொதுவான காரணிகள் :</u>**

(1) பாடத்திட்டத்தை/ பாடப்புத்தகத்தை நன்கு படிக்கவும்.

(2) வினாத்தாளைப் பெற்றவுடன் அறிவுறுத்தல்களை கவனமாக வாசிக்கவும் (இந்நோக்கத்திற்காக கூடுதல் நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது).

(3) பரீட்சார்த்திகள் வினாவை பல தடவைகள் வாசித்து, எதனை விபரிக்க வேண்டும் என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும். நேரடி விடையொன்று எதிர்பார்க்கப்படும் போது விடைகள் துல்லியமாக வழங்கப்பட வேண்டும். தேவையற்ற விபரிப்புகளையும் விபரங்களையும் எழுதுவது தவிர்க்கப்பட வேண்டும்.

(4) விடைகள் ஒரு மொழியில் மாத்திரம் எழுதப்பட வேண்டும். இந்த மொழிமூலமானது நீங்கள் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது விண்ணப்பித்த மொழிமூலமாகவே இருத்தல் வேண்டும் என்பதுடன் ஒவ்வொரு வினாவுக்குமான விடைகளை எழுத ஆரம்பிக்கும்போது விடைப் புத்தகத்தின் ஒரு புதிய பக்கத்தில் எழுத ஆரம்பிக்கவும்.

(5) பரீட்சையின்போது நேரத்தை வினைத்திறனான முறையில் பயன்படுத்தவும்.

(6) விடைப் புத்தகத்தை கையளிப்பதற்கு முன்னர், எல்லா வினா இலக்கங்களையும் இரு முறை பரீட்சிப்பதுடன் சுட்டெண் சரியாக எழுதப்பட்டுள்ளதா என்பதையும் பரீட்சிக்கவும்.

(7) “செயல் வினைச்சொல் செவ்வை நிரல்’’ வினாத்தாளின் இறுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் வினைச்சொல் ஒன்றைக் கொண்டிருக்கும். பரீட்சார்த்திகள் அந்தச் செவ்வை நிரலில் தரப்பட்ட வரைவிலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு விடையளித்தல் வேண்டும்.

(8) கையெழுத்து தெளிவானதாக இருப்பதையும் வினா இலக்கங்கள் ஒவ்வொரு விடைக்கும் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளதையும் உறுதிப்படுத்துங்கள்.

(9) AAT இனால் வெளியிடப்பட்ட சுய கற்றல் பாடப் புத்தகத்தையும் கட்டுரைகள், சஞ்சிகைகள் போன்றவற்றையும் வாசிப்பது முக்கியமானதாகும்.

(10) கடந்தகால வினாத்தாள்களுக்கும் முன்னோடி வினாத்தாள்களுக்கும் விடையளித்து பயிற்சி பெறுவது அறிவை மேம்படுத்த உதவும்.

(11) சித்தியடைகின்ற உறுதியான நேர்மறையான மனநிலையுடன் பரீட்சையை எதிர்கொள்ளுங்கள்.

-***-